ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1395/26 - 2005 ජූනි 03 වැනි සිකුරාදා - 2005.06.03

*1395/26 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8(1), 9 (1) (i) ஆம் பிரிவுகளின் கீழ் "வீதி அபிவிருத்திப் பிரதேசம்" ஆகப் பிரகடனப்படுத்தல்

*1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், ஹாலிஎலயிலிருந்து ஊவா கெற்றவல மற்றும் மஸ்பன்ன ஊடாக கீர்த்திபண்டாரபுர வரையிலான வீதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிலப் பகுதியை "வீதி அபிவிருத்திப் பிரதேசம்" ஆக இத்தால் பிரகடனம் செய்யப்படுவதுடன், அப் பிரதேசத்திற்குட்படும் தனியார் காணிகளை மேற்குறித்த சட்டத்தின் 9 (1) (i) ஆம் பிரிவின்கீழ் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*தற்போதுள்ள பதுளை-கண்டி வீதியை 20-30 கிலோ மீற்றர் நீளத்தை சுருக்கும் வகையில், ஹாலிஎல, ஊவா கெற்றவல, மஸ்பன்ன மற்றும் கீர்த்திபண்டாரபுர ஊடாக புதிய நெடுஞ்சாலையொன்றை அமைப்பதற்கு இது தேவைப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நெடுஞ்சாலைகள் அமைச்சர்.*

*நெடுஞ்சாலைகள் அமைச்சு,*
*9 ஆம் மாடி,*
*செத்சிறிபாயா,*
*பத்தரமுல்லை,*
*2005, மே 30.*

*6-396*